Groundnut

* 288 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state the quantity of groundnut grown in our State during 1955–56 and during 1965–66 ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தமிழ் நாட்டில் 1955–56, 1965–66 ஆண்டுகளில் பயிரிடப்பட்ட வேர்க்கடலையின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஆண்டு.	பரப்பளவு (ஏக்கரில்).	உற்பத்தி (டன்களில்).
1955–56	17,98,604	8,43,109
1965–66	22,69,000	9,11,180

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, இந்தக் கணக்கில் பார்த்தால், பத்து ஆண்டுகளுக்கு முன்னாலே எந்த அளவு மணிலா பயிரானதோ அதைவிட இப்போது அதிகரித்திருக்கிறது. அதற்குக் காரணம் அதற்கு அதிக விலை கிடைக்கிறது. ஏராளமானவை நெல் சாகுபடி செய்கிற நிலத்திலெல்லாம் மணிலா பயிர் செய்யப்பட்டு வருகிறது. நெல் சாகுபடியைவிட மணிலா பயிரினால் அதிக லாபம் கிடைப்பதால் விவசாயிகள் நெல் விளையும் நிலத்திலும் மணிலா பயிரிடுகிறார்கள். ஆகவே, அவர்கள் அப்படிச் செய்யாமல் தடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ? நெல் விளையும் நிலத்தில் மணிலா சாகுபடி செய்வதற்கு தடை ஏற்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினருடைய கேள்வியிலிருந்து, தவறான முயற்சியிலே சிலர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. மணிலா பயிரினால் அதிக வருவாய் கிடைக்கிறது என்பதிலே அரசாங்கத்திற்கு ஆட்சேபனை கிடையாது என்றாலும், மக்களுக்கு உணவு அளிப்பதிலே இந்த அரசு சிரத்தை கொண்டிருக்கிறது. மணிலா கடந்த பத்தாண்டுகளில் கணிசமாக உற்பத்தியாகியிருக்கிறது. நெல் விளையும் நிலத்தில் மணிலா பயிரிட விவசாயிகள் ஈடுபடுவார்களானால், தக்க சமயத்தில் நடவடிக்கை எடுப்பதுபற்றி அரசு ஆலோசிக்கும்.

*289 *Q.*—THIRU K. VINAYAKAM : } THIRU MUNU. ADHI : } Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that large scale sugarcane, banana and groundnut cultivation is carried on where paddy was grown previously ; and

(*b*) if so, the steps proposed to be taken to check this fall in paddy cultivation.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) முன்னர் நெல் விளைவிக்கப்பட்ட நிலப்பரப்புகளில் இப்போது கரும்பு, வாழை, வேர்க்கடலை எதுவும் அதிக அளவில் பயிரிடப்படவில்லை. எனினும், அவ்வாறு பயிரிடப்படுவதன் போக்கு பற்றி அரசு விழிப்புடன் கவனித்து வருகிறது.

(இ) இக்கேள்வி எழவில்லை.

திரு. கே. விநாயகம் : ஐயா, இப்படி நெல் பயிரிடும் நிலங்களையெல்லாம் வாழைத் தோட்டமாகவும், கரும்புத் தோட்டமாகவும் அல்லது 'பணப்பயிர்கள்' நிலமாகவும் மாற்றுவதற்குக் காரணம், நெல்லுக்கு இருக்கிற விலை—நெல்லுக்கு அரசாங்கம் கொடுக்கிற விலையாயினும் சரி—'ஓபன் மார்க்கெட்டிலும்' தருகிற விலையாயினும் சரி, மற்ற பயிர்கள் விடக் குறைவாக இருப்பதேயாகும். அதனால் விவசாயிகள் மக்களுடைய உணவுப் பிரச்சினையைப் பற்றிக் கவலை கொள்ளாமல், அதிக லாபத்தைத்

தரும் பயிர்களைச் செய்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியானால், அரசாங்கம் தலையிட்டு, அதைத் தடுப்பதற்கு ஏதாவது வழிவகை இருக்கிறதா? அதைத் தடுக்காமல் இருந்தால் உணவுப் பிரச்சினை மோசமாகும் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அரசாங்கம் தலையிட்டு, தடுக்கப்பட வேண்டிய அளவுக்கு நிலைமை சீர்கேடு அடையவில்லை.

மேற்கத்திய பாணியில் விடுதி

* 290 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா —

(அ) வெளி நாட்டிலிருந்து வரும் உல்லாசப் பயணிகளுக்கு ஏற்றவாறு எல்லா நவீன வசதிகளைக்கொண்ட மேற்கத்திய பாணியில் ஓட்டலைக் கட்டுவதற்காக கல்கத்தா மெசர்ஸ் ஓபிராய் ஓட்டல் லிமிடெட் நிறுவனத்திற்கு நீண்டகால குத்தகைக்கு நிலம் கொடுக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், எத்தனை வருடங்களுக்கு, குத்தகை தொகை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) குத்தகைக்காரரிடம் நிலம் ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து இதன் குத்தகைக்காலம் 50 ஆண்டுகள் ஆகும். குத்தகைக்காரர் விரும்பினால் குத்தகைக்காலம் மேலும் 49 ஆண்டுகளுக்குப் புதுப்பிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் கொடுக்க வேண்டிய குத்தகைத் தொகை 1,00,350 ரூபாய் ஆகும். இதனை தொகை செலுத்த வேண்டிய ஆண்டில் முந்திய திங்கள் 10-ம் தேதியன்றோ அதற்கு முன்போ செலுத்த வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இப்போதுள்ள நிலைமை என்ன விவரம் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : குத்தகை விடப்பட்டாகி விட்டது. பணமும் கட்டியாகிவிட்டது.

முதலாண்டு மருத்துவ மாணவர்கள்

291. வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய மருத்துவ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முதலாண்டு மருத்துவ மாணவர்கள் இறுதித் தேர்தலில் தோல்வியுற்றால் கல்லூரியிலேயே சேர்ந்து படிக்க வாய்ப்பைக் கொடுக்கும் உத்தேசம் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

மருத்துவக் கல்வி பட்ட மேற்படிப்பு

* 292 வினா.—**திரு. எஸ். ஜே. ராமசாமி : திரு. எம். வில்லியம் :** } மதிப்பிற்குரிய மருத்துவ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டுஏப்ரல் மாதத்தில் வைத்திய பிற்கால மேல் பட்ட படிப்பு நிலையம் (Postgraduate Medical Education and Research Centre) சென்னையில் மத்திய அரசாங்க உதவியுடன் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரமென்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சென்னை அடையாற்றில் மருத்துவக் கல்வி பட்ட மேற்படிப்பு—ஆராய்ச்சி நிலையம் ஒன்றை மத்திய அரசு உதவியுடன் நிறுவுவதற்கான செயற்குறிப்பு உள்ளது. இது குறித்து இந்திய அரசுடன் கடிதப் போக்கு வரத்து நடந்து வருகிறது.